ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில்
ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்
இணைந்து நடத்தும்

# தைப்பூசத் திருவிழா 2024

**25.01.2024 வியாழக்கிழமை**



# THAIPUSAM FESTIVAL 2024

**THURSDAY, 25TH JANUARY 2024**

**Jointly Organised by:**
**Sri Thendayuthapani Temple (STT)**
**Sri Srinivasa Perumal Temple (SSPT)**

## PAALKUDAM RECEIPTS

Online booking for Paalkudam for Thaipusam 2024 will be available from 10.12.2023, Sunday 9.00am to Tuesday 23.01.2024, 8.30pm. Devotees can book their preferred Time Slots and purchase the receipts online through www.thaipusam.sg.
Online booking is mandatory for Paalkudam.

| Services | Amount |
|---|---|
| Self-prepared Paalkudam | $20 |

Participants may collect 2 pieces of numbered stickers from any of the two temples of which one shall be placed on the Paalkudam and the other retained to identify and collect the respective Kudam after the Paal Abishegam at STT. Devotees are to note that the peak period for Paalkudam is from midnight to 2.00am.

## SPECIAL ARRANGEMENTS FOR SENIORS

Temple prepared Paalkudam (milkpot) is available for senior citizens and differently abled devotees. Those eligible can book the same at Sri Thendayuthapani Temple office, from 10.12.2023 to 23.01.2024, between 8.30am and 12 noon or 5.30pm and 8.30pm. Those who registered for Temple prepared paalkudam (milk pot) were able to collect at Sri Thendayuthapani Temple on Thaipusam day.

## PAAL KAVADI / ALAGU & RATHA KAVADI RECEIPTS

Devotees are requested to register Online through www.thaipusam.sg and obtain participation receipts as mentioned below. Anyone below the age of 16 is permitted to carry only Paalkudam or Paal Kavadi without piercing of hooks and / or spikes.

| Date | Types of Service | Amount |
|---|---|---|
| 10.12.2023 to 23.01.2024 | Paal Kavadi & Thottil Kavadi | $40 |
| 16.12.2023 to 20.01.2024 | Alagu & Ratha Kavadi | $100 |

**Paal Kavadi, Thotil Kavadi tickets are sold online. Alagu & Ratha kavadi devotees shall register online and pay for the tickets at SSPT to purchase the tickets. Devotees carrying Alagu/Ratha Kavadis must complete online registration at www.thaipusam.sg and make payments at SSPT to confirm their booking. Devotees requiring help to use online system may seek assistance from temple 06.00 pm to 8.30 pm.**

## IMPORTANT INFORMATION FOR ALL PARTICIPANTS

1. Every Alagu or Ratha Kavadi bearer accompanied by an entourage shall nominate one adult (min 21 years old) from that entourage as the Kavadi Representative. **The Kavadi Bearer and the Kavadi Representative shall take responsibility for the conduct of the participants in the entourage.**

2. Devotees with medical conditions eg. Diabetic, heart patients etc are advised to consult their physician and determine fitness to take part in the Thaipusam Festival.

3. Devotees carrying Alagu or Ratha Kavadi are requested to enter SSPT via the Race Course Road entrance.

<table>
<tr><th>VOWS</th><th>Entering SSPT</th><th>Leaving SSPT</th></tr>
<tr><td>Paalkudam<br>(Online booking<br><br>Paalkavadi<br><br>Thottil Kavadi</td><td>24.01.2024<br>08.00pm<br>onwards</td><td rowspan="3">25.01.2024<br>before<br>12.00 noon</td></tr>
<tr><td>Ratha (Chariot) Kavadi – AM</td><td rowspan="2">25.01.2024<br>2.00am to<br>9.00am</td></tr>
<tr><td>Alagu (Spike)<br>Kavadi - AM<br>Unlimited Numbers</td></tr>
<tr><td>Ratha (Chariot) Kavadi - PM</td><td rowspan="2">25.01.2024<br>9.00am to<br>03.00pm</td><td rowspan="2">25.01.2024<br>before<br>5.00 pm</td></tr>
<tr><td>Alagu (Spike) Kavadi - PM<br>(80 receipts only)</td></tr>
</table>

## SPECIAL ARRANGEMENTS AT SSPT

Devotees may engage the following services at SSPT.

### VOLUNTEER SERVICE

Volunteers (subject to availability) will assist to pierce the "Spike" (Vel/Alagu), for Kavadi carriers.

### PRAYER / PROCESSION

| SSPT | STT |
|---|---|
| 24th January 2024<br>Commencement of Paalkudam Procession 11.30pm | 25th January 2024<br>Deeparathanai at 12.05am, followed by Paalkudam and Paal kavadi darshan at STT |

## SPECIAL EVENTS AT SRI THENDAYUTHAPANI TEMPLE

### HEAD SHAVING

The following arrangements for Devotees to fulfil their "Head Shaving" vows will be made at the vicinity of Teochew Building (next to STT).

| Date | Time |
|---|---|
| 12.01.2024 (Friday) | 10.00am to 12.00pm & 4.00pm to 8.00pm |
| 13.01.2024 to 23.01.2024 | 7.00am to 11.00am & 4.00pm to 8.00pm |

Note: There will be no head shaving service on the eve and on Thaipusam day.

## SILVER CHARIOT PROCESSION

Wednesday, 24th January 2024 Silver Chariot Procession.

Silver Chariot procession of Sri Thendayuthapani from Sri Thendayuthapani Temple, Tank Road will commence at 5.00am and stop at the following locations:

| Chariot stopping point | Approximate Time |
|---|---|
| Sri Mariamman Temple South Bridge Road | 6.30 am |
| Sri Layan Sithi Vinayagar Temple Keong Saik Road | 7.30 am |

The Chariot procession will resume from Sri Layan Sithi Vinayagar Temple, Keong Saik Road at 5.00pm on the same day and proceed enroute along following locations (Subjected to Procession Permit).

| Chariot stopping point | Approximate Time |
|---|---|
| Bank of India Cecil Street | 6.40pm |
| Indian Overseas Bank Cecil Street | 7.00pm |
| Synagogue Street | 7.30pm |
| High Street | 8.15pm |
| Sri Thendayuthapani Temple | 9.00pm |

Timing and passing points are subjected to change as per road/traffic conditions.

**Annathanam at Sri Thendayuthapani Temple on Thaipusam Day - Thursday, 25th January 2024**

Annathanam will be provided from 12.00pm to 3.00pm.

**NOTE: Due to space constraint at SSPT and overcrowding on the eve of Thaipusam, Wednesday, 24th January 2024, we kindly request devotees to prepare their paalkudams at home.**

## பால்குடம் சீட்டு

தைப்பூசம் 2024க்கான பால்குட சீட்டுகளுக்கு இணையம் வழியாக மட்டுமே 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 23.01.2024 செவ்வாய்க்கிழமை இரவு 8.30 வரை வாங்கலாம். பக்தர்கள் தங்களுக்கு விருப்பமான நேரத்தை www.thaipusam.sg மூலம் சீட்டுக்களை தேர்ந்தெடுத்து வாங்கலாம்.

| சேவை | தொகை |
|---|---|
| சுயமாக தயாரிக்கப்பட்ட பால்குடம் | $20/- |

பால்குடம் பங்கேற்பாளர்கள் 2 ஸ்டிக்கர்களை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதில் ஒன்றை பால்குடத்தில் ஒட்டி, மற்றொன்றை அடையாளத்திற்கு வைத்துக்கொண்டு பால் அபிஷேகத்திற்குப் பிறகு உங்கள் குடத்தை அடையாளம் கண்டு பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஆண்டும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 2 மணி வரை அதிக பக்தர்கள் பால்குடம் எடுக்க புறப்படுகின்றனர் இந்த காலகட்டத்தை பக்தர்கள் தவிர்க்க விரும்பலாம்.

## முதியோர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள்

கோயிலில் தயாரிக்கும் பால்குடத்தை எடுக்க விரும்பும் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (மட்டும்), அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் அலுவலகத்தில், 10.12.2023 முதல் 23.01.2024 வரை, காலை 08.30 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 05.30 மணி முதல் இரவு 08.30 மணி வரையிலும் பதிவு செய்து கொள்ளலாம். கோயிலில் தயாரித்த பால்குடத்திற்கு பதிவு செய்தவர்கள் தைப்பூசத்தன்று அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் பால்குடங்களை பெற்றுக்கொள்ளலாம்.

## பால் காவடி/ அலகு / இரதக் காவடிச் சீட்டு

பால் காவடி/அலகு/இரதக் காவடிச் சீட்டுக்களை கீழ்கண்ட நாட்களில் "www.thaipusam.sg" மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

| தேதி | சேவை | தொகை |
|---|---|---|
| 10.12.2023 முதல் 23.01.2024 வரை | பால் காவடி & தொட்டில் காவடி | $40/- |
| 16.12.2023 முதல் 20.01.2024 வரை | அலகு & இரதக் காவடி | $100/- |

பால் / தொட்டில் காவடி சீட்டுகள் இணையத்தில் வாங்க வேண்டும். அலகு / ரத காவடிக்கு இணையத்தில் பதிந்து கொண்டு கட்டணத்தை SSPTயில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும். இணையத்தில் ரசீது வாங்க உதவி தேவைபட்டால் மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை இரு ஆலயங்களில் உதவி நாடலாம்.

16 வயதிற்கு உட்பட்ட பக்தர்கள் பால்குடம் அல்லது பால் காவடி எடுப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர். 16 வயதிற்கு குறைந்தவர்களுக்கு கொக்கிகளும் அலகுகளும் குத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

## அனைத்து பக்தர்களுக்கான முக்கிய அறிவிப்பு

1. அலகு அல்லது இரதக் காவடி எடுப்போர் தங்களுக்கு துணை வருவோரில் ஒருவரை (21 வயதிற்கு மேலாக இருக்க வேண்டும்) காவடி பிரதிநிதியாக நியமிக்கவேண்டும். காவடி எடுப்பவரும் காவடி பிரதிநிதியும் தங்கள் சூழலில் இடம் பெறுவோரின் நடத்தைக்கு பொறுப்பேற்க வேண்டும்.
2. உடல்நல குறையுள்ள பக்தர்கள் (உதாரணமாக சர்க்கரை நோய், இருதய நோய், இரத்தக் கொதிப்பு) தங்கள் குடும்ப மருத்துவரின் ஆலோசனையை பெற்று பிறகு காவடி எடுப்பதைப் பற்றி முடிவு எடுக்கவும்.
3. அலகு, இரதக் காவடி எடுக்கும் பக்தர்கள் ரேஸ்கோர்ஸ் சாலை நுழைவாயில் வழியாக பெருமாள் கோயிலுக்குள் வரவேண்டும்.

<table>
<tr><th>பிரார்த்தனை வகை</th><th>பெருமாள் ஆலயத்தில் நுழைவது</th><th>பெருமாள் ஆலயத்திலிருந்து வெளியேறுவது</th></tr>
<tr><td>பால்குடம்<br>பால்காவடி<br>தொட்டில் காவடி</td><td>24.01.2024<br>இரவு 8.00<br>முதல்</td><td rowspan="3">25.01.2024<br>நண்பகல் 12.00<br>மணிக்கு முன்பு</td></tr>
<tr><td>இரதக் (தேர்) காவடி</td><td rowspan="2">25.01.2024<br>விடியற்காலை<br>2.00 முதல்<br>காலை 9.00<br>வரை</td></tr>
<tr><td>அலகு (ஸ்பைக்) காவடி - AM வரம்பற்ற எண்கள்</td></tr>
<tr><td>இரதக் (தேர்) காவடி - PM</td><td rowspan="2">25.01.2024<br>காலை 9.00<br>முதல் மதியம்<br>03.00 வரை</td><td rowspan="2">25.01.2024<br>மாலை 5.00<br>மணிக்கு முன்பு</td></tr>
<tr><td>அலகு (ஸ்பைக்) காவடி - PM (80 ரசீதுகள்)</td></tr>
</table>

## ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் சிறப்பு ஏற்பாடுகள்

பக்தர்கள் கீழ்காணும் சேவைகளை பெற கோயிலைத் தொடர்புகொள்ளவும். தேவை உள்ளோருக்கு அலகு மற்றும் சிலாவு குத்திவிடும் சேவையை தொண்டூழியர்கள் புரிவார்கள்.

### வேண்டுதல் / ஊர்வலம்

| பெருமாள் கோயில் | தெண்டாயுதபாணி கோயில் |
|---|---|
| பால்குடம் புறப்புடுதல் 24.01.2024 இரவு 11.30 மணி முதல் | 25.01.2024 விடியற்காலை 12.05 மணி முதல் பால்குடம், பால் காவடி செலுத்த ஆரம்பித்தல் |

## ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் சிறப்பு நிகழ்வுகள்

முடிக் காணிக்கை செலுத்துவோரின் வசதிக்காக கோயிலுக்கு அடுத்துள்ள Teochew கட்டிடத்தின் அருகில் உள்ள மைதானத்தில் கீழ்க்கண்ட நேரப்படி முடியிறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| தேதி | நேரம் |
|---|---|
| 12.01.2024 | காலை 10.00 முதல் மதியம் 12.00 மற்றும் மாலை 4.00 முதல் இரவு 8.00 வரை |
| 13.01.2024 முதல் 23.01.2024 வரை | காலை 7.00 முதல் மதியம் 11.00 மற்றும் மாலை 4.00 முதல் இரவு 8.00 வரை |

குறிப்பு: தைப்பூசத்திற்கு முந்தைய நாள் மற்றும் தைப்பூசம் அன்று முடியிறக்கும் சேவை இருக்காது.

### புதன்கிழமை, 24 ஜனவரி 2024 வெள்ளி இரத ஊர்வலம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலிலிருந்து காலை 5.00 மணிக்கு முருகப் பெருமானின் வெள்ளி இரத ஊர்வலம் புறப்பட்டு கீழ்க்கண்ட இடங்களில் நிற்கும்.

| இரதம் நிற்கும் இடம் | உத்தேச நேரம் |
|---|---|
| ஸ்ரீ மாரியம்மன் கோயில், சவுத் பிரிட்ஜ் ரோடு | காலை 6.30 மணி |
| ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் கோயில், கியோங் செய்க் சாலை | காலை 7.30 மணி |

வெள்ளி இரத ஊர்வலம் ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் கோயிலிலிருந்து அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு புறப்பட்டு கீழ்க்கண்ட வழியாக வரும்.

இரத வழித்தடங்கள் இரத ஊர்வல அனுமதிக்கு உட்பட்டது.

| இரதம் நிற்கும் இடம் | உத்தேச நேரம் |
|---|---|
| பேங்க் ஆப் இந்தியா சிசில் ஸ்ட்ரீட் | மாலை 6.40 மணி |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சிசில் ஸ்ட்ரீட் | இரவு 7.00 மணி |
| சினகோக் ஸ்ட்ரீட் | இரவு 7.30 மணி |
| ஹை ஸ்ட்ரீட் | இரவு 8.15 மணி |
| ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் சென்றடைதல் | இரவு 9.00 மணி |

போக்குவரத்து நிலவரத்திற்கு ஏற்ப மேற் கூறப்பட்ட இரதம் நிறுத்தும் இடங்கள் மற்றும் நேரங்கள் மாற்றங்களுக்கு உட்பட்டவை.

### வியாழக்கிழமை, 25 ஜனவரி 2024

ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலில் அன்னதானம் நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறும்.

குறிப்பு: ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் இடம் பற்றாக்குறை காரணமாகவும் , அதிக கூட்டம் இருப்பதாலும் தைப்பூச தினத்தன்று முதல் நாள் 24.01.2024 அன்று இரவு பால்குடம் எடுக்கும் பக்தர்கள் தங்களது பால்குடங்களை வீட்டிலேயே தயார் செய்து எடுத்து வருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



(R) Printed by: K.S.Maniam Printing & Ent., Johor Bahru, Malaysia. Tel: 07-386 1819





## THAIPUSAM FESTIVAL 2024

### SIGNIFICANCE

Thaipusam is observed on the full moon day of the Tamil month Thai to make offerings to Lord Muruga.

## தைப்பூசத் திருவிழா 2024

முருகப்பெருமானுக்குச் செலுத்தும் நேர்த்திக் கடன் பல வகைப்பட்டதாயினும், காவடி தூக்கும் நேர்த்திக் கடன் மிகவும் சிறப்பு வாய்ந்தது. தை மாதப் பௌர்ணமியன்று வரும் பூச நட்சத்திரத்தில் ஆண்டு தோறும் தைப்பூச விழா கொண்டாடப்படுகிறது.